www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V11Acc

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 11

நேரம் : 1.30 மணி

கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 50

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 10×1=10

1) வணிகத்தின் நிகர இலாபம் ................ அதிகரிக்கும்.

அ) எடுப்புகளை ஆ) பெறுதல்களை

இ) பொறுப்புக்களை ஈ) முதலினை

2) நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தரக் காலக் கடன் தொகை

அ) முதலினச் செலவுகள் ஆ) வருவாயினச் செலவுகள்

இ) வருவாயின வரவுகள் ஈ) முதலின வரவுகள்

3) ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?

அ) காலப்போக்கு ஆ) தேய்வு மற்றும் உராய்வு

இ) தொழில்நுட்ப மாற்றங்கள் ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

4) இருப்பாய்வை பாதிக்காத பிழைகள்

அ) விதிப்பிழைகள் ஆ) அதிகமாக கூட்டுதல் பிழைகள்

இ) குறைவாக கூட்டுதல் பிழைகள் ஈ) பகுதி விடு பிழைகள்

5) வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்

அ) வருவாயினச் செலவுகள்

ஆ) முன்கூட்டி செலுத்திய வருவாயினச் செலவுகள்

இ) நீள்பயன் வருவாயினச் செலவுகள்

ஈ) முதலினச் செலவுகள்

6) நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

அ) ஓர் நடப்புச் சொத்து ஆ) ஓர் நீர்மைச் சொத்து

இ) புலனாகும் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

7) ஒரு நடவடிக்கை முழுவதுமே பதிவு செய்யப்படாதபோது அது ............. எனப்படும்.

அ) விதிப்பிழை ஆ) முழுவிடுபிழை

இ) பகுதி விடுபிழை ஈ) இருமுறை பதிந்த பிழை

8) பின்வரும் எந்த சொத்துகளுக்கு வெறுமையாதல் முறையில் தேய்மானம் நீக்கப்படுகிறது?

அ) பொறி (ம) பொறி இயந்திரம் ஆ) சுரங்கம் மற்றும் கற்சுரங்கங்கள்

இ) கட்டடங்கள் ஈ) வணிகக்குறி

9) திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்

அ) முதலினச் செலவு ஆ) வருவாயினச் செலவு

இ) நீள்பயன் வருவாயினச் செலவு ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

10) இருப்புநிலைக்குறிப்பு என்பது .............

அ) ஓர் கணக்கு

ஆ) ஓர் அறிக்கை

இ) ஓர் அறிக்கையுமில்லை, ஓர் கணக்குமில்லை

ஈ) மேல்கூறியவற்றில் எதுவுமில்லை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - II

**II. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **5×2=10**

**(வினா எண் 17ற்கு கட்டாயம் விடையளிக்கவும்)**

11) பயன் தீரும் சொத்துக்கள் என்றால் என்ன?

12) விதிப்பிழை என்றால் என்ன?

13) தேய்மானம் என்றால் என்ன?

14) வருவாயினச் செலவு என்றால் என்ன?

15) ஒரு நிறுமம் ₹ 50,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்றை வாங்கியது. கட்டடத்தின் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். மேலும் அதன் இறுதி மதிப்பு ₹ 5,000. நேர்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.

16) பின்வரும் தகவல்களிலிருந்து விற்ற பொருளின் அடக்க விலையைக் கணக்கிடுக.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 8,000 |
| கொள்முதல் | 60,000 |
| நேரடிச் செலவுகள் | 5,000 |
| மறைமுகச் செலவுகள் | 6,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 9,000 |

17) **பின்வரும் பிழைகளின் ஒவ்வொன்றிலும் பாதிக்கும் கணக்கு / கணக்குகளைக் கூறவும்:**

அ) கடனுக்கு சரண்யாவிடமிருந்து ₹ 150க்கு சரக்கு வாங்கியது. அவரது கணக்கில் பற்றுப்பக்கம் எடுத்தெழுதப்பட்டுள்ளது.

ஆ) விற்பனை ஏட்டின் மொத்தம் ₹ 4,500 இருமுறை பேரேட்டில் எடுத்து எழுதப்பட்டுள்ளது.

## பகுதி - III

**III. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **5×3=15**

**(வினா எண் : 24ற்கு கட்டாயம் விடையளிக்கவும்)**

18) இருப்பாய்விற்கும் இருப்புநிலைக்குறிப்பிற்கும் இடையே உள்ள ஏதேனும் மூன்று வேற்றுமைகளை எழுதுக.

19) நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.

20) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

21) இருப்பாய்வு வெளிக்காட்டும் பிழைகள் யாவை?

22) **பின்வரும் செலவினங்களை முதலினம், வருவாயினம், நீள்பயன் வருவாயினச் செலவினங்களாக வகைப்படுத்தவும்:**

i) மூன்று ஆண்டுகளுக்கு பயனளிக்கும் வகையில் செய்யப்பட்ட விளம்பரச் செலவு.

ii) கட்டடம் பதிவு செய்யும் போது செலுத்திய பதிவுக் கட்டணம்.

iii) பழைய கட்டடம் வாங்கிய போது, அதனை பராமரித்து, வண்ணம் பூசி பயன்படுத்துவதற்கு ஏற்றாற்போல் மாற்றியதற்கானச் செலவு.

23) சரவணன் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்கள் மூலம், டிசம்பர் 31, 2017 ஆம் ஆண்டிற்கான மொத்த இலாபத்தினை கணக்கிடவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,50,000 |
| நேரடிச் செலவுகள் | 8,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 25,000 |
| ஆண்டிற்கான நிகர விற்பனை | 4,00,000 |
| ஆண்டிற்கான நிகர கொள்முதல் | 1,50,000 |

24) நிலைச்சொத்து ₹ 50,000க்கு வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15% குறைந்துசெல் இருப்பு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **3×5=15**

25) அ) கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.

தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹ 10,000.

தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹ 5,000.

நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹ 2,000.

பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹ 3,000.

ஆலை வாடகைச் செலுத்தியது ₹ 12,000.

**(அல்லது)**

ஆ) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாப நட்டக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| மொத்த இலாபம் | 50,000 |
| அலுவலக வாடகை | 10,000 |
| அலுவலக சொத்துக்கள் மீதான தேய்மானம் | 8,000 |
| தள்ளுபடி கொடுத்தது | 12,000 |
| விளம்பரம் | 4,000 |
| தணிக்கைக் கட்டணம் | 1,000 |
| வட்டி பெற்றது | 2,000 |
| தள்ளுபடி பெற்றது | 3,000 |
| வெளிதூக்குக்கூலி | 2,500 |
| அலுவலகம் கட்டடம் மீதான காப்பீடு | 3,500 |
| பொதுச்செலவுகள் | 3,000 |
| உள் ஏற்றிச்செல் செலவு | 1,000 |

26) அ) முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும். (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) ஒரு கணக்காளர் கீழ்க்காணும் பிழைகளை இருப்பாய்வு தயாரித்த பின் கண்டறிந்தார். அனாமத்துக் கணக்கு உள்ளது எனக் கருதி அப்பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

அ) இயந்திரம் ₹ 3,500-க்கு வாங்கியது கொள்முதல் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ஆ) ரெய்னாவுக்கு ₹ 1,800 சம்பளம் செலுத்தியது அவர் கணக்கில் பற்று வைக்கப்பட்டது.

இ) வட்டி பெற்றது ₹ 200 தரகுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஈ) அமுத நிலாவிடமிருந்து கடனுக்கு ₹ 1,800-க்கு சரக்கு வாங்கியது கணக்கு ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

உ) பயன்படுத்தப்பட்ட அறைகலன் ₹ 350-க்கு விற்றது விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

27) அ) ஒரு தயாரிப்பு நிறுமம், ஏப்ரல் 1, 2010 அன்று பொறிவகை மற்றும் இயந்திரம் ₹ 4,50,000க்கு வாங்கி, நிறுவுதல் செலவாக ₹ 50,000 செலவழித்தது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பிறகு, அச்சொத்தானது ₹ 3,85,000க்கு விற்கப்பட்டது. தேய்மானம் ஆண்டுதோறும் 15% நிலைத்தவணை முறையில் நீக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச்-31ல் முடிக்கப்படுகின்றன. விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடவும்.

**(அல்லது)**

ஆ) பின்வரும் சரண் என்பவரின் இருப்பாய்விலிருந்து 2017, டிசம்பர் 31, ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக்குறிப்பையும் தயாரிக்கவும். 31.12.2017 அன்றைய இறுதிச்சரக்கிருப்பு ₹ 2,50,000 என்று மதிப்பிடப்பட்டது.

| பற்று இருப்பு | ₹ | வரவு இருப்பு | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (1.1.2017) | 2,00,000 | பற்பல கடனீந்தோர் | 12,000 |
| கொள்முதல் | 7,50,000 | கொள்முதல் திருப்பம் | 30,000 |
| உள்தூக்கு கூலி | 75,000 | விற்பனை | 10,20,000 |
| கூலி | 3,65,000 | பெற்ற கழிவு | 53,000 |
| சம்பளம் | 1,20,000 | முதல் | 33,00,000 |
| பழுதுபார்ப்புச் செலவுகள் | 12,000 | | |
| வாடகையும், வரியும் | 2,80,000 | | |
| கைரொக்கம் | 97,000 | | |
| நிலம் | 21,50,000 | | |
| எடுப்புகள் | 1,66,000 | | |
| வங்கி வைப்புகள் | 2,00,000 | | |
| | 44,15,000 | | 44,15,000 |

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com